# பெரம்பலூர் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

**(10.05.2017 முதல் 14.05.2017 வரை)**

**தமிழ்நாடு நெல் ஆராய்ச்சி நிலையம், ஆடுதுறை– 612 101**

போன்: 0435 2472098 E-mail: dirtrri@tnau.ac.in Fax: 0435 2472881

==========================================================================

**தேதி:09.05.2017**

### கடந்த 4 நாட்களில் நிலவிய வானிலை (05.05.2017– 08.05.2017)

| காரணிகள் | கடந்த நாட்களில் வானிலை |
|---|---|
| மழை (மி.மீ.) | 3.2 |
| அதிகபட்ச வெப்பநிலை (°C) | 39 – 41 |
| குறைந்தபட்ச வெப்பநிலை (°C) | 26 – 29 |
| மேகமூட்டம் (ஆக்டா) | 4 – 6 |
| காற்றின் ஈரப்பதம் (%) | 30 – 64 |
| காற்றின் வேகம் (கி.மீ./மணி) | 6 – 15 |

### அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு

| காரணிகள் | எதிர்பார்க்கப்படும் வானிலை | | | | |
|---|---|---|---|---|---|
| | நாள் 1<br>10.05.2017 | நாள் 2<br>11.05.2017 | நாள் 2<br>12.05.2017 | நாள் 4<br>13.05.2017 | நாள் 5<br>14.05.2017 |
| மழை (மி.மீ.) | 3 | 2 | 0 | 0 | 0 |
| அதிகபட்ச வெப்பநிலை (°C) | 40 | 40 | 40 | 40 | 40 |
| குறைந்தபட்ச வெப்பநிலை (°C) | 28 | 28 | 28 | 28 | 28 |
| மேகமூட்டம் (ஆக்டா) | 4 | 4 | 4 | 4 | 4 |
| காற்றின் ஈரப்பதம் (%) | 55 – 60 | 55 – 60 | 55 – 60 | 55 – 60 | 55 – 60 |
| காற்றின் வேகம் (கி.மீ./மணி) | 6 | 6 | 6 | 8 | 8 |
| காற்றின் திசை | தெற்கு | தெற்கு | தெற்கு | தெற்கு | தெற்கு |

10.05.2017 முதல் 14.05.2017 வரை வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். மழை அளவு 2 – 3 மி.மீ.

***வேளாண் அறிவுரைகள் :***

**பயிர் : நெல் மற்றும் இறவை உளுந்து**

- கோடை நெல் நாற்றங்காலில் இலைசிலந்தியின் தாக்குதல் பரவலாக தென்படுகிறது. இதனைக் கட்டுப்படுத்த டைக்கோபால் 600 மி.லி. / ஏக்கர் அல்லது நனையும் கந்தகத்தூள் 400 கிராம் / ஏக்கர் என்ற அளவில் 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கவும்.
- கோடை நெல் நாற்றங்காலில் இலைப்பேன் தாக்குதல் பரவலாக தென்படுகிறது. இதனைக் கட்டுப்படுத்த குளோரிபைரிப்பாஸ் 2.5 மி.லி/லி தெளித்து கட்டுபடுத்தலாம்.
- நெல் தரிசில் பயிரிடப்பட்ட இறவை உளுந்து பயிரில் வெள்ளை ஈ பரவலாக தென்படுகிறது. இதனைக் கட்டுப்படுத்த அசாடிராக்டின் 0.03 சதம் (3 மி.லி./லி) ஒட்டும் திரவத்துடன் கலந்து காலை அல்லது மாலை நேரங்களில் கைத்தெளிப்பான் கொண்டு தெளிக்கவும். சேதம் அதிகரிக்கும் போது இமிடாகுளோபிரிட் 200 எஸ்.எல் 40 மி.லி (ஏக்கர்) 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கவும்.
- இறவை உளுந்து பயிருக்கு விதைத்த மூன்றாம் நாள் பெண்டிமெத்தலின் களைக்கொல்லியை ஏக்கருக்கு 1.3 லிட்டர் என்ற அளவில் கைத்தெளிப்பான் கொண்டு தெளிக்கவும்.

**கால்நடைகளுக்கு**

- மாடுகளுக்கு வெப்ப அயர்ச்சியால் ஏற்படும் பால் உற்பத்தி இழப்பை குறைக்க சமையல் சோடாவை தீவனத்துடன் 100 கிராம் என்ற அளவில் கலந்து அளிக்க வேண்டும்.
- கோடைக்காலங்களில் கால்நடைகள் தீவனம் உட்கொள்ளும் அளவு குறைவாக இருப்பதால் தேவையான அமினோ அமிலங்கள், உயிர்ச்சத்துக்கள் மற்றும் தாது உப்புக்கள் போன்ற நுண்ணூட்ட சத்துக்களின் அளவை தீவனத்தில் அதிகரிக்க வேண்டும்.
- பருவத்திற்கு வந்த மாடுகளை காலை 9.00 மணிக்குள் செயற்கை முறை கருவூட்டல் செய்ய வேண்டும்.

**இயக்குநர்**